**DINAMALAR – 15.1.2010**

# பாரதியார் பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா

கோவை, ஜன.16–

கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை மிக உற்சாகமாக கொண்டாடப்பட்டது. பொங்கல் விழாவை முன்னிட்டு புதிய பானையில் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதை தொடர்ந்து பொங்கல் பூஜை நடைபெற்றது. விழாவில் பல்கலைக்கழக துணை வேந்தர் சுவாமிநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த விழாவில் பல்கலைக்கழக பதிவாளர், ஆட்சிக்குழு உறுப்பினர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.